பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

03 12 2025 WEDNESDAY 7.15 PM

ஆகாஷவாணி - செய்திகள்

*தலைப்புச் செய்திகள்*

1. நாட்டின் வளர்ச்சியில் மாற்றுத் திறனாளிகள் முக்கியப் பங்கு வகிப்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. தேசிய கல்விக் கொள்கை, தாய்மொழி கல்விக்கு முக்கியத்துவம் அளித்துள்ளதாக மத்திய அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார்

3. அம்ரித் பாரத் திட்டத்தின்கீழ் 105 ரயில் நிலையங்கள் மேம்படுத்தப்பட்டுள்ளதாக ரயில்வே அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

4. சத்திஷ்கடில் பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட நடவடிக்கையில் 7 நக்ஸலைட்டுகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

5. இத்தாலி சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் Harmeet Desai அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

>>>>><<<<<

நாட்டின் வளர்ச்சியில் மாற்றுத் திறனாளிகள் முக்கியப் பங்கு வகிப்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தினத்தை ஒட்டி சமூகவலைதளத்தில் விடுத்துள்ள செய்தியில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

மாற்றுத்திறனாளிகளின் மேம்பாட்டில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாக கூறியுள்ள பிரதமர், இதற்காக நிறைவேற்றப்பட்ட திட்டங்களை பட்டியலிட்டுள்ளார்.

>>>>><<<<<

மத்திய வெளியுறவுத்துறை அமைச்சகத்தின் MADAD இணையதள சேவை மூலம் கடந்த மூன்றாண்டுகளில் ஒரு லட்சத்து 38 ஆயிரம் புகார்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளதாக வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் உலகளாவிய மாநாட்டில் இன்று உரையாற்றிய அவர், பாஸ்போர்ட்டுக்கான சிறப்பு கட்டணம் மூலம் பெறப்பட்ட நிதியை பயன்படுத்தி 2 லட்சத்து 38 ஆயிரம் பேருக்கு உதவி அளிக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

நாடு முழுவதும் 500–க்கும் மேற்பட்ட இடங்களிலிருந்து பாஸ்போர்ட் பெற முடியும் என்று அவர் சுட்டிக்காட்டினார்.

வெளிநாடுகளிலிருந்து இந்தியாவுக்கு குடியேறுபவர்களை கட்டுப்படுத்துவதற்காக பிற நாடுகளுடன் 21 ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

உள்நாட்டிலேயே வேலைவாய்ப்புகளை உருவாக்குவதன்மூலம், படித்த இளைஞர்கள் வெளிநாடுகளுக்கு வேலை தேடிபோகும் நிலையை தடுக்க முடியும் என்று திரு ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

>>>>><<<<<

தேசிய கல்விக் கொள்கை, தாய்மொழி கல்விக்கு முக்கியத்துவம் அளித்துள்ளதாக மத்திய கல்வி அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் கூறியுள்ளார்.

இன்று மாநிலங்களவையில் கேள்வி நேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், பிஎம் ஸ்ரீ திட்டம், அனைவருக்கும் கல்வி திட்டம் மற்றும் தேசிய கல்விக் கொள்கை ஒன்றோடு ஒன்று இணைந்தது என்று குறிப்பிட்டார்.

கல்வி வளர்ச்சிக்கான மத்திய அரசின் திட்டங்களை, தமிழக அரசு முழுமையாக நிறைவேற்ற வேண்டும் என்றும் திரு. தர்மேந்திர பிரதான் கேட்டுக் கொண்டார்.

>>>>><<<<<

அம்ரித் பாரத் திட்டத்தின்கீழ் 105 ரயில் நிலையங்கள் மேம்படுத்தப்பட்டுள்ளதாக ரயில்வே அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் கேள்வி நேரத்தின் போது இதனை தெரிவித்த அவர், இத்திட்டத்தின்கீழ் ஆயிரத்து 337 ரயில் நிலையங்கள் மேம்படுத்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டதாக கூறியுள்ளார்.

இந்த திட்டத்திற்காக, நடப்பு நிதியாண்டில், 12 ஆயிரத்து 118 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

>>>>><<<<<

ஆன்லைன் நிதி மோசடி புகார் மூலம் 23 லட்சம் மனுக்கள் பெறப்பட்டு, 7 ஆயிரம் கோடி ரூபாய் மீட்கப்பட்டுள்ளதாக மத்திய உள்துறை இணையமைச்சர் திரு Bandi Sanjay kumar தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் இன்று எழுத்து மூலம் அவர் அளித்த பதிலில், இணையதள நிதி மோசடி குறித்த புகார்களை 1 9 3 0 என்ற இலவச எண்ணில் தெரிவிக்கலாம் என்று கூறியுள்ளார். வங்கிகள், நிதித்துறை, மத்திய – மாநில அரசு பிரதிநிதிகளை கொண்டு ஆன் லைன் மோசடி தடுப்பு மையத்தை உருவாக்கியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

காவல்துறை அறிவுறுத்தலின்பேரில் இதுவரை 11 லட்சம் சிம் கார்டுகள் முடக்கப்பட்டுள்ளதாக திரு Bandi Sanjay kumar கூறியுள்ளார்.

>>>>><<<<<

மத்திய அரசு பழங்குடியின மாணவர்களின் மேம்பாட்டிற்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திரு ஜுவல் ஓரம் தெரிவித்துள்ளார்.

ஆந்திரப்பிரதேச மாநிலம் அமராவதியில் இன்று Eklavya உண்டு உறைவிடப்பள்ளிகளுக்கான தேசிய கலை நிகழ்ச்சியை தொடங்கிவைத்து பேசிய அவர், இந்த பள்ளிகள் மூலம் பழங்குடியின மாணவர்கள் கல்வித்தரத்தில் மட்டுமின்றி, விளையாட்டுத்துறையிலும் சிறந்து விளங்குவார்கள் என்று கூறினார்.

நாடு முழுவதிலும் இருந்து 22 மாநிலங்களை சேர்ந்த ஆயிரத்து 800 மாணவர்கள் இந்த மூன்று நாள் கலை நிகழ்ச்சியில் கலந்துகொள்கின்றனர்.

>>>>><<<<<

நாட்டின் பல்வேறு கல்வி நிறுவனங்களில் வெளிநாடுகளைச் சேர்ந்த 72 ஆயிரத்து 218 மாணவர்கள் கல்வி பயின்று வருவதாக மத்திய கல்வித்துறை இணையமைச்சர் திரு. சுகந்த மஜும்தா தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் கேள்வி நேரத்தில் இதனை தெரிவித்த அவர், சர்வதேச தரத்திற்கு இணையான எட்டு கல்வி நிறுவனங்களுக்கு ஆறாயிரத்து 199 கோடி ரூபாய் அனுமதிக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

>>>>><<<<<

சத்திஷ்கடில் பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட நடவடிக்கையில் 7 நக்ஸலைட்டுகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

பிஜப்பூர் – தண்டேவாடா எல்லைப்பகுதியில் பாதுகாப்புப் படையினர் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டபோது, நக்ஸலைட்டுகள் துப்பாக்கிச் சூடு நடத்தினர்.

இதனையடுத்து, பாதுகாப்புப் படையினர் நடத்திய பதில் தாக்குதலில் 7 நக்ஸலட்டுகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இதில் பாதுகாப்புப் படையைச் சேர்ந்த இரண்டு பேர் உயிரிழந்தனர்.

>>>>><<<<<

நாட்டின் வளர்ச்சிக்கு சுற்றுலாத்துறை முக்கிய பங்கு வகிப்பதாக மத்திய கலாச்சாரம் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் திரு கஜேந்திர சிங் ஷெகாவத் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், அனைத்து மாநிலங்களின் சுற்றுலா கொள்கைகள் குறித்து ஆராய்ந்து வருவதாக கூறினார்.

சுற்றுலா பயணிகளை ஈர்க்கும் வகையில், சுற்றுலாத் தலங்களை மேம்படுத்த மாநில அரசுகளுடனும், மாவட்ட நிர்வாகங்களுடனும், மத்திய அரசு கலந்தாலோசித்து வருவதாக திரு கஜேந்திர சிங் ஷெகாவத் தெரிவித்தார்.

>>>>><<<<<

இந்திய கடலோர காவல்படையின் Vigraha போர் கப்பல், மூன்று நாள் பயணமாக இந்தோனேஷியாவின் ஜகார்தாவுக்கு செல்லவுள்ளது.

இந்தோனேஷியாவின் கடல்சார் பாதுகாப்புப்படை Bakamla-வுடன் இணைந்து, பாதுகாப்பு ஒத்திகையில் ஈடுபட உள்ளதாக இந்திய கடலோர காவல்படை தெரிவித்துள்ளது.

ஆசியான் நாடுகளுடன் இணைந்து, கடல்சார் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுவதற்காக Vigraha போர் கப்பல் ஜகார்த்தாவிலிருந்து மலேசியாவின் Klang துறைமுகத்திற்கும் செல்ல உள்ளது.

>>>>><<<<<

யுக்ரைன் உடனான போரை முடிவுக்கு கொண்டுவர அமெரிக்கா முன்வைத்த அமைதி உடன்படிக்கையை ரஷ்ய அதிபர் திரு விளாடிமீர் புட்டின் நிராகரித்ததாக வந்த செய்திகளை ரஷ்யா மறுத்துள்ளது.

இதுதொடர்பாக, செய்தியாளர்களிடம் பேசிய ரஷ்ய அரசின் செய்தித்தொடர்பாளர் திரு Dmitry Peskov, ரஷ்யா – யுக்ரைன் இடையேயான பேச்சுவார்த்தைகளில் முன்வைத்த கருத்துக்களில் ஒரு சிலவற்றை ஏற்றுக்கொண்டதாக கூறினார்.

மேலும், ஒரு சிலவற்றில் ஒருமித்த கருத்து எட்டப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

இதனிடையே, பெல்ஜியம் நாட்டின் Brussels-ல் செய்தியாளர்களிடம் பேசிய யுக்ரைன் அதிபர் திரு விளாடிமீர் ஜெலன்ஸ்கி, அமெரிக்க பிரதிநிதிகளுடன் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தப்போவதாக தெரிவித்தார்.

**>>>>><<<<<**

இத்தாலியின் Parma-வில் நடைபெற்று வரும் சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் Harmeet Desai அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர் 11-7, 11-5, 7-11, 11-7 என்ற செட்கணக்கில், போலந்தின் Marek Badowski-ஐ வென்றார்.

**>>>>><<<<<**

ஆசிய குதிரையேற்ற சாம்பியன் போட்டியில், இந்தியா ஒரு தங்கம், ஒரு வெள்ளிப்பதக்கம் வென்றது.

தாய்லாந்தின் Pattaya-வில் நடைபெற்ற இப்போட்டியின், தனிநபர் பிரிவில் Ashish Limaya தங்கப்பதக்கம் வென்று வரலாற்றுச் சாதனை படைத்தார்.

குழுப் பிரிவில் இந்தியாவிற்கு வெள்ளிப்பதக்கம் கிடைத்தது.

**>>>>><<<<<**

**தென்னாப்பிரிக்காவுக்கு எதிரான 20 - 20 கிரிக்கெட் போட்டியில் பங்கேற்பதற்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.**

**சூர்யகுமார் யாதவ் தலைமையிலான இந்த அணியில் சுப்மன் கில், திலக் வர்மா, ஹர்தீக் பாண்டியா உள்ளிட்ட 15 பேர் இடம்பெற்றுள்ளனர்.**

**ஐந்து போட்டிகளைக் கொண்ட இந்த தொடரின் முதலாவது ஆட்டம், வரும் 9ஆம் தேதி கட்டாக்கில் நடைபெறுகிறது.**

**>>>>><<<<<**

இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில், 359 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்கோடு பேட் செய்து வரும் தென்னாப்பிரிக்கா சற்றுமுன்வரை 20 புள்ளி ஐந்து ஓவரில் 2 விக்கெட் இழப்புக்கு 128 ரன் எடுத்துள்ளது.

ராய்ப்பூரில் நடைபெற்று வரும் இப்போட்டியில் டாஸ் வென்ற தென்னாப்பிரிக்கா முதலில் பந்து வீச தீர்மானித்தது.

இதனையடுத்து பேட் செய்த இந்தியா நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 5 விக்கெட் இழப்புக்கு 358 ரன் எடுத்தது.

Ruturaj Gaikwad 83 பந்துகளில் 105 ரன்னும், விராட் கோலி 93 பந்துகளில் 102 ரன்னும் குவித்தனர்

>>>>><<<<<

லண்டனில் நடைபெற்று வரும் சர்வதேச செஸ் போட்டியின் எட்டாவது சுற்று முடிவில், ஆறரை புள்ளிகளுடன் இந்தியாவின் Praggnanandha தொடர்ந்து முதலிடத்தில் உள்ளார்.

>>>>><<<<<

சென்னையில் நடைபெற்று வரும் சர்வதேச ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் அனாகத் சிங் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் 11-2, 11-2, 11-8 என்ற செட்கணக்கில் ஜப்பானின் Akari Midorikawa-வை வென்றார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவில் வேலவன் செந்தில்குமாரும் அரையிறுதிக்கு தகுதி பெற்றுள்ளார்.

>>>>><<<<<

சிலியின் சாண்டியாகோவில் நடைபெற்று வரும் உலக கோப்பை ஜூனியர் மகளிர் ஹாக்கி போட்டியில், இந்தியா இன்று ஜெர்மனியை எதிர்கொள்கிறது.

>>>>><<<<<

குவஹாத்தி மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Tarun Manapalli, Tushar, Suveer, Sanskar Saraswat, Ginpaul Sonna ஆகியோர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

>>>>>END<<<<<